உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்.

சென்னைத் திருமயிலை

ஸ்ரீ கபாலீஸ்வரரின்

# சிவஞானத் தேவனம்.

இஃது

ஷை கற்பகவல்லி சமேத ஸ்ரீ கபாலீஸ்வரரின்மீது
நாற்பத்தோன்பதாண்டுகளாக
நறுமணப் பண்மாலைத் திருவாய்மலர்ந்தருளியவரும்,
சென்னை சேத்துப்பேடு
"ஸ்ரீ ஜெய விநாயக சிவப்ரகாச மடாலயத்தில்"
சமாதிகொண்டு விளங்குபவருமாகிய
அருட்கவி - கி. ஊ. பா. கங்காதர நாவலராம்
**ஸ்ரீமத் - சிவப்பிரகாச தேசிக சுவாமிகளின்**
ஜயேஷ்டப் புத்திரரும், ஷை மடாலய ஆதீன அர்ச்சகருமாகிய
**மதுரகவி-சிவப்பிரகாச குமாரகுரு தேசிகராலியற்றி**

§

கையொப்பக்காரர்களின் நன்முயற்சியினுல்
தமது
சென்னை சேத்துப்பேடு
ஸ்ரீ ஜெய விநாயக சிவப்ரகாச அச்சுக்கூடத்திற்
பதிப்பிக்கப்பட்டு

o

53 - வது வருடத்தின் திருப்பணியாக கலியுகாப்தம்
5034க்குச் சரியான தமிழ் ஆங்கீரசவருஷ பங்குனிமீ 26உ
சுவாமி சந்நிதானத்தில் ஷை தேசிகரவர்களால்
அரங்கேற்றஞ்செய்யப்பட்டது.
1933 வரு ஏப்ரல்மீ 8உ

OFFICE OF THE REGISTRAR
3 JUN 1933
MADRAS

023.38.211
N33

OFFICE OF THE REGISTRAR OF ... 3 JUN 1933 MADRAS

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்.

சென்னைத் திருமயிலை
ஸ்ரீ கபாலீஸ்வரரின்

# சிவஞானத் தேவனம்.

இஃது
ஷை கற்பகவல்லி சமேத ஸ்ரீ கபாலீஸ்வரரின்மீது
நாற்பத்தோன்பதாண்டுகளாக
நறுமணப் பண்மாலைத் திருவாய்மலர்ந்தருளியவரும்,
சென்னை சேத்துப்பேடு
"ஸ்ரீ ஜேய விநாயக சிவப்ரகாச மடாலயத்தில்"
சமாதிகோயிற்கொண்டு விளங்குபவருமாகிய
அருட்கவி - கி. ஊ. பா. கங்காதர நாவலராம்
**ஸ்ரீமத் - சிவப்பிரகாச தேசிக சுவாமிகளின்**
ஜ்யேஷ்டப் புத்திரரும், ஷை மடாலய ஆதீன அர்ச்சகருமாகிய
**மதுரகவி-சிவப்ரகாச குமாரகுரு தேசிகரா லியற்றி**

—§—

கையொப்பக்காரர்களின் நன்முயற்சியினல்
தமது
சென்னை சேத்துப்பேடு
ஸ்ரீ ஜெய விநாயக சிவப்ரகாஸ அச்சுக்கூடத்திற்
பதிப்பிக்கப்பட்டு

—o—

53 - வது வருடத்தின் திருப்பணியாக கலியுகாப்தம்
5034 க்குச் சரியானத் தமிழ் ஆங்கீரசஹூ பங்குனிமீ 26உ
சுவாமி சந்நிதானத்தில் ஷை தேசிகரவர்களால்
அரங்கேற்றஞ்செய்யப்பட்டது.
1933 ஹூ ஏப்ரல்மீ 8உ



5

உ

சிவமயம்

OFFICE OF THE REGISTRAR OF ...
3 JUN 1933
MADRAS

524
294.53

திருச்சிற்றம்பலம்.

சென்னைத் திருமயிலை

ஸ்ரீ கபாலீஸ்வரரின்

# சிவஞானத் தேவனம்.

அருட்கவி - கி. ஊ. பா. கங்காதர நாவலராம்

**ஸ்ரீமத் - சிவப்பிரகாச தேசிக சுவாமிகள்**

திருவாய்மலர்ந்தருளிய

ஸ்ரீ ஜேய விநாயகர் வணக்கம்.

அறுசீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்.

மாசிலா பரம ஞான வள்ளலே வானோர் தங்க
ணேசனே சகல காரண நிருமிதா மயிலை யண்ணல்
வாசஞ்சேர் கமலன்மேன் மாலை வழுத்தவே வரந்தந் தாளுந்
தேசுயர் வடிவே தேவே ஜேயவிநா யகபெம் மானே. (க)

மன்னுநின் பாதம் போற்றி மகிழ்ந்தவல் லாள னுக்கு
தின்மையை விழைந்த தந்தை செப்பொணு துன்பமுற்ற
தன்மையை மறக்க லாகா தழைமயிலை யீசன் சீர்த்தி
சின்மயா சொலவந் தாளும் ஜேயவிநா யகபெம் மானே. (உ)

அற்புதா கரமாய்த் தோன்றி யரனுமை களிக்க தேவர்
துற்பலன் றனை யகற்றி சொல்தந்தா வளனே வென்று
கற்பனைக் கடங்கா வாழ்வைக் கணித்தவா திருமயிலை
சிற்பரன் றுதிக் கருடா ஜெயவினா யகபேம் மானே. (ங)

பந்தமே தீர்க்க வேண்டி பணியது விழைவ ரிந்திரன்
நந்தனஞ் செழிக்க வில்லா நாட்டத்தால் முத்தமிழ்க்கோன்
விந்தையாய் கமண்டலத்தைக் கவிழ்த்தவா வியன்சீர்சொல்ல
சிந்தூர முகனே வந்தாள் ஜெயவிநா யகபேம் மானே. (ச)

ஆதரை தனைப் புரக்கு மாயனன் றுண்மை காணு
தாதலா லாங்கு தித்த வரக்கரால் துன்பங் கொண்ட
போதவன் போற்றிச் செய்து புகலுற்ரேய் மயிலை யீசன்
தீதில்லா துதிக்கு வந்தாள் ஜெயவிநா யகபேம் மானே. (ரு)

புகழ்மிகும் கண்ண னன்று பொய்யதைப் புகன்ற தாலே
அகம்பிறழ்ந் திடவெ டுத்த வரவந்த ஹுருவை மாற்றித்
துகளிலா நலமே தந்த சுமுகனே மயிலை நாதன்
திகழுஞ்சீர் தனக் கெழிடா ஜெயவிநா யகபேம் மானே. (சு)

—o—

## சிவோபதேசமாலை.

—s—

பண் - நட்டராகம்.

---

சொச்சொரூப மதுதானே சுகசொரூப மெனவேதஞ் சொல்லர் நிற்கு, மிச்சையற்ற யிடந்தானே யேகாந்த நிலையெனவேயிசைப்பர் நல்லோர், பச்சிளங் கிள்ளையுமா தேவியிட மிலகுஞ்சிவ பரமன் பூந்தா, ளுச்சிமேற்பட் டிடின்வினைக ளொழிந்திடுஞ் சத்தியமைந்தா வோர்ந்துய் வாயே. (க)

அணைகடந்த வெள்ளமது வழுதாலுந் தொழுதாலு மதுவராது துணைவருநஞ் சிவன்கழலை மறந்துபல தொல்லையினைச் சூழ்ந்துக் கெட்டா, லிணையெனவொன் றின்றிதழைத் திலகுமரன் றனை

யிழந்திங் கென்செய் வாய்நீ, இணையிலுயர் தரமெனச்சொல் வதில் பயனென் பக்திவழி தேர்ந்துய் வாயே. (௨)

தனம்படைத்தா ரதன்வழிக்கே யிருமாந்து மகிழ்ச்சிதனைச் சார்ந்து பின்னும், யினம்படைத்தா லாகாகா யிவ்வுலக மெனக் கல்லா லெவர்க்குண் டென்னும், மனம்படைத்தார் தனக்குபக்தி நெறிவிரதம் சாதுசங்கம் மாறாய்க் காணும், சினம்படைத்த கூற் றன்வந்த பின்னன்றோ மற்றவருந் தெரிவர் கண்டாய். (௩)

சித்தாந்த சிரவணத்தில் சேகரிக்குஞ் சிவச்செல்வஞ் சிறந்தச் செல்வம், பத்தாகம் விட்டகலாப் பரங்கருணை வடிவமன்றி பார் வைக் கில்லை, எத்தவத்தோர் களுமிதற்கே யியம்பாதப் படியு ழைத்து யின்பங் கொண்டார், சித்தமொரு படித்தானு ரன்றி யிதை செப்புவரார் சிந்திப்பாயே. (௪)

அலையுமனக் குரங்கடங்குங் கலையன்றோ வறிவுதரு மகித்யம் போக்கும், சிலையதுபோ லசைவின்றி நீசும்மா யிருப்பதற்குத் திறம்வந் துற்றால், உலைகொதிப்பு வனலடங்கி லின்றெனபோ லூழ்வினைக ளொடுங்கு மப்பா, கலைகடந்து நிலைகடந்து சிவத் தோடு கலக்கும்வழி கண்டுகொள்ளே. (௫)

ஆசமனங் குக்கிடா சனமுதலுங் குண்டலியா யமர்ந்துநிற்கு ரேசக பூரககும்ப மிவையன்றோ வொன்றி லொன்றும் ரேகைப் பூர்க்கும், பாசமலி பழவினைபற் றற்றிடலோ யினிப்பிறவி பற்றா தப்பா, யீசன்பர சிவனையுளத் திருத்திதொழு யெஞ்ஞான்று மெமனண் டானே. (௬)

ஆக்கியளித் தாளவல்ல சிவனடிக்கே யன்புடையா ரகன்று நீத்து, போக்குசுத்தி போட்டுவிட்ட போகமதை மெய்யெனவே புகழ்ந்து நத்தி, தீக்குருவி வினைப்பூச்சி யெனத்திரிந்து நல்லவரின் சேர்க்கை யற்று, யீக்குங்கோடா னெனவாழ்ந்தென் பலன் கண் டாய் மகனேநீ யியம்புவாயே. (௭)

ஊனுன வுடலழிமுன் னுயிர்மறைமு னுண்மை பக்தி யோர் ந்துசிவன், றானுகுர் தன்மைபடி தானாகித் தத்வமொன்றாய் தழை

023:58.2111

சிவத்தின், தேனுன வமிர்தவருட் பிரசாதம் பெற்றருந்தித் திடன் கொண்டாயேல், கோனுய்வந் தவன்றனே வுபதேசங் கொடுத் துனேயுங் குணஞ்செய் வானே. (அ)

காத்திருந்து பூசைசெய்து காவேறும் படியுயிர் காணிக்கை யாக, பாத்திரமாம் மனத்தினேயே பலிதந்து பற்றகன்று பணிந்து தில்லேக்; கூத்ததனேத் தரிசித்துக் கும்பிட்டுக் குறை யகன்றார்க் கோடா கோடி, சாத்திரப்பேய் சாதிப்பேய் தனக்குழைப்பார்க் கிது பொய்யாய் தழைக்குந் தானே. (௯)

காதிருந்துஞ் செவிடனென யேற்படிலோ கன்மமெனக் கரு தல் வேண்டும், நீதிதெரிந் திருந்தும்வினைக் கிடாகிப் பவம்வி ழைந்தால் நினைப்ப தென்னே, மாதிருந்தும் பிறர்மனைபா லிச்சை வைத்து பழிநகையால் வருந்துவானேல், போதனைசெய் குரு விருந்தும் பூர்வவினை தடித்ததெனல் பொய்யாகாதே. (௰)

தந்தையன்னை குருதெய்வ மரசு சுற்ற மிவர்கடமை தனே வழாது, சிந்தைமகிழ் வுடனடத்தில் சருவபுக ழதுமுடியாய்த் திகழுமப்பா, பந்தவினை யாலிவற்றிற் கிடுக்கணது செய்துபழி பற்றுமாகில், வந்தசன்மம் போயினபின் வளர்பிறைபோ லுரு வெடுத்து வதைகாண் பாயே. (௧௧)

சுகிதுகியென் றிருவர்முன்னூழ் வலிபோல வுடலெடுத்துத் தோன்றி நிற்க, அகிலமெலாம் படைத்தளித்தாள் சிவமிருக்க யிதனுண்மை யறியாயினர், திகிலடைந்து நரகதுய ரடைந்தசரித் திரமிருக்க சிவபூசைக்கு, அகில்கட்டை பயன்படுமக் கதியுமின்றி பிணக்கட்டையா யழி தனன்றே. (௧௨)

இலவுகாத் திடுங்கிள்ளை யெனவுடற்கே யிரவுபக லுழைத்தா யேனும், நலம்பொலமென் றுரையிரண்டில் நாதனருள் வரும் வழியை நாட வேண்டின், புலனடங்கி தீச்செயலற் றுளம்போல வெளிச்செயலும் பொருந்தியேசஞ், சலமெனுமூழ் கடல்கடந் தால் சனனமில்லே சிவமுத்தி தழைக்குந்தானே. (௧௩)

மலேயளவும் மனமிலேயேல் மணலளவா யெண்ணுதற்கே வாய்ப்பபோலும், கலேயளவு கருத்திலேயேல் கணவளவாய் கடுகள

வாய் கருதலாகும், கொலையளவு குணமிலையேல் கொடியதெனப் படியளவாய்க் குறைய நிற்கும், இலையளவும் பறந்திடல்போ லிழுக் களவா யுடலெடுத்திங் கிறக்கின்றேமே. (கச)

ஒன்றுபத்து நூறுடனு யிரம்லட்சங் கோடியென வுரைப்பி தல்லா, லன்றுமின்று மென்று மொன்று யமைந்திடல்போல் கணக்குமொன் றுகுங் கண்டாய், சென்றுகொன்று தின்றுநன்று யென்றுடலைச் செழிக்கவைத்த செயலெல்லாம்பின், வென்றிடற் காகாதெமனு லழிந்திடற்கோ சிவன்கழலை வெறுத்தாய் மைந்தா.

பலபேத மதுசொலினுஞ் சிவஞானப் பிரகாசம் பார்க்கவன்பு நிலவிடுமே யொருமொழிக்கு மிடந்தருங்காண் பொய்யதனை நிச மென்றெண்ணுன், கல்முடைந்தா லதற்காகக் கண்கலங்கிற் பயன் றாவக் காரணம்போல், நலமிழந்துப் பின்னழுதென் னுமுணர்ந் தீசன் பதத்தை நம்புவாயே. (கரு)

ஆற்றருகி லிருந்துங்குளிக் கானறிவென் னதைப்போன்றே ரனந்த மக்கள், சாற்றுமறை நெறிவெளியா யுரைப்பகுரு விருந் தாலுஞ் சார்ந்திடாது, வேற்றுமைகொண் டதனுலே விழலாகி மாய்ந்திடிலோ வித்தினுமோ, யேற்றுக்கொள்வா ரறிவுடையா ரிதைபழிப்பா ரறிவிலரென் றியம்பு நூலே. (கஎ)

ஈசனின் பூசனையின்றி பொசிப்பதெலாம் மலமென்றே யிசைக் கும் வேதம், நேசமுள வுள்ளமதி லிலங்கிடுமிஃ துண்மை பொய் யும் நியமந்தாண்டா, பாசமிகும் பத்தரன்றி மற்றவரார் பற்று கொண்டு பணிசெய் துய்வார், மாசகலரப் படியொளிகண் டிடுவ திலை சிவனுண்மை வாய்க்குந் தானே. (கஅ)

நெல்லளவு கல்லளவு பல்லளவு யில்லளவு நேர்மை யாய்ந்து புல்லளவு செல்லளவு மல்லளவு வல்லளவு பொருந்த நோக்கி, வெல் லளவு நில்லளவு வுள்ளபடி கொள்ளுவையேல் வெறுப்பு தோன்று சொல்லளவே சுருதியள வதின்படியே யுழைக்கில்சிவந் துலங்குந் தானே, (கக)

ஆண்டுவந்த வவையுணரு மவசரமிங் குனையணுகா தலைந்து மாயம், பூண்டதுபோல் வெறிபிடித்து பினத்தியெங்கும் போதக

மாய்ப் புகன்ற தெல்லாம், நீண்டதுநா ளழிந்ததுட லுயிரதுபோ மிடந்தெரியு நிட்டையுண்டோ, தாண்டுவையோ வூழ்வலியைச் சங்கரன்ற டொழுதிலையேல் தவிப்பாய் நீயே. (உ௰)

கடல்மலையும் பிறவிகளைத் தனையுளவோ வத்தகையாய் கணிக் கலாகா, துடலதுவந் துயர்வுடன்றாழ் வதுவெனபொய் யாற்றித் துன்பத் துட்பட்டையோ, விட முண்டா னுயிர்துறத்த லது போல பவச்செயலே விழைந்து நொந்தாய், இடபமிசை வருஞ் சிவனை யேத்திதொழ வினையகலு மிதையோர்வாயே. (உக)

பசியெனூஉம் பாசையுட லாங்குளத்தை மூடிடவும் பற்று யெல்லாம், நிசியது சூரியன்முன நில்லாதொடுங்கு நேர்மையதாய் நிகழுமப்பா, உசிதகுண மென்பதெல்லா முறங்கிடும்பி னூத்தை குழிக் குதவியாரே, கசிந்தரன்பூந் தாளணுகி கண்ணீர்கொண் டேத்தில் காட்சிக் காணலாமே. (உஉ)

அண்டமதி லுள்ளதெலாம் பிண்டமதி லிருக்கவா ராய்ந்து பார்க்கில், கண்டமதில் விடந்தரித் துலகனைத்துங் காத்தசிவ காட்சித் தோன்றும், விண்டபெரி யோர்கருத்தை நம்பியுண்மைத் தெளியாது வீணே கெட்டால், பண்டையில்செய் பழக்கமதோ வந்துன்னைக் கெடுத்ததப்பா பகருவாயே. (உ௩)

வினை வினையென் றெடுத்து பல விரித்துரைத்து வஞ்ஞான வித்துவோங்கி, தனைக்காணுஞ் சரிதைமுதல் ஞானமுணர் சைவ நூல்மேன் சங்கைக் கொண்டு, பனைபோல வாபாச மதுநீண்டு வகங்கரித்து பாபச்செய்கை, யினைப்புரிந்தா லெவர்தடுத்து நலஞ் செய்வார் விவேகமுற் றிறைஞ்சுவாயே. (உ௪)

இச்சைவழி யாவுங்கட்டு பட்டிருப்ப தெனமுநியோ ரெழுதி வைத்தார், மச்சமது தூண்டிலலை வணம்பிறந்தே யனுபவித்தல் வழியென் றோர்ந்து, முச்சகடைத் தரும் மயலைக் கடந்து சிவ முத்திபெற முன்வந்தாயே, லச்சமிலைக் கூற்றுமிலை பிறப்பிறப்பு மிலைமகனே வாய்ந்துபாரே. (உ௫)

அனுட்டானஞ் செப தபமந் திரயோக சிரவணங்க ளகலா நெஞ்சும், மனத்துறவும் வாய்த்திடினே மாலயன் றேடியேகாணு

3 JUN 1933
MADRAS



வள்ளல் பாதம், நினதுளத்தி லிலகுஞ்சுக மதுவருகுஞ் சனனம் போம் நேய மைந்தா, கனகமின்றி நகையில்லைபோல் சிவமன்றி யாதுமில்லை கருதி போற்றே. (உசு)

பொய்வேட மெனுஞ் சாதிப் போராட்ட வார்த்தைகளைப் புறம்பே தள்ளி, மெய்வேடந் தாங்கிதிரு வெண்ணீற்றை யணிந்தவரே மேலோருண்மை,வுய்வேட மந்தரங்க பக்திரசக் யானவமுதுண்டு வாழ்வா, ரைவேடர் வெளிகாணு ரதுபோல யிருப்பாரோர்ந் தன்புசெய்யே. (உஎ)

புகலுவபோல் மனம் பொருந்தி நின்று விட்டால் போக யோகம் புகழெற்றிற்கு, சகமுடன் சீவமும் பரமாய்த் தழைத் திருக்கு முளவதுவுந் தான்கண்டுய்து, பகலவன்போ லெவ்விடத்து மொளி திகழ்வா னவன்பெருமை பகர்வரியாரே, சுகமுதிக்குங் கயிலைபெற சிவன்கழலை யெஞ்ஞான்றுந் துதிசெய்வாயே. (உஅ)

முன்வினையின் படிசனன மதுமுளைத்து யிலை பூகாய் முதிரும் வண்ணம், அன்னியஞ்சொந் தமுமென்று பலவேறு சகடையினி லாழத்தள்ளி, தன்மமதை யழித்துவூழ் கன்மமதைப் பயிராக்கிச் சாக்காடாளு, ரென்பதுண்மை யுணர்ந்தரன்றுள் பூசிக்கி லெமனணுகா னின்பமுண்டே. (உகூ)

பணம் படைத்தும் பூதமெனக் காத்திருந்தா லிறந்திடுநாள் பயனங்கேது, குணம்படைத்த மெய்யடியார்க் கழிவேது பழியேது கூற்றங்கேது, மணம் படைத்த மலராதனு லரனடியை யருச்சித்து வணங்குமைந்தா, கணம்படைத்த சுகம்படைப்பாய் தேவரெலாம் புகழார்க்க கலப்பாய் நீயே. (௩௰)

எங்கெங்கே வோடிடினு மங்கங்கே நின்னுருவே யிருப்பதல்லான், துங்கமெய்ஞ் ஞானச் சிவமே சொரூபமதா யெவ்விடத் துந் தோன்று நிற்கும், பங்கயன்மால் தேடியமெய்ச் சரித்திர முங் கூற்றன்கதி படித்தாரானல், சங்கைகொண்டு திரிந்தலைந்து வினைகச் சாவர்களோ சாற்று மைந்தா. (௩௧)

காரணமே பொன்னாகுங் காரியமே நகையாகுங் கருதிபார்த் தோர்க், காரணமே யெழுத்தாகு மவ்வெழுத்தே யிறையாகு

மனுபவத்தில், பூரணமே சிவமாகு மச்சிவமே சீவமெனப் பொருந் தா நிற்குஞ், சீரணிமெய் யடியருடன் கூடிசதா சிவன்கழலைச் சேவிப்பாயே. (கஉ)

செயற்கரியச் செயல் செய்வார் தீமையகற் றிடுவரவர் சீவ முத்த, ருயர்பதவி யதையடைவ ருள்ளமெலாஞ் சிவமணக்கு முண்மை யாமால், நயனமின்றி யோர்ப்பொருளைக் காணமுடியாத வண்ணம் ஞானமின்றி, வியன்மிகுஞ் சிதாகாச சொரூபமது பக்தியல்லான் விளங்கிடாதே. (கங)

சத்துசித்தா னந்தமென மூவகையா யண்ணலுரு சாற்றும் வேதம், பத்தரகத் தினினடிக்கும் பரசிவத்தின் மகிமை யெவர்ப் பறையலாகும், சித்தமதே சிவமாகத் தெளிந்தயிடந் தனிலன்றோ தெரிசித்துய்ய, வித்தகமொன் றுநித்திடினே மெய்விளங்கும் பொய்யகலும் விரும்பிக்காணே. (கச)

சதுர்மறை யாகமஞ்சுருதிஸ் மிருதி புராணங் கலைகள் தான் கற்றாலும், பொதுபொதுவென் றறிவிலரை மயக்கிடும்புன் கதை கள்சொலிப் புலம்பிட்டாலும், இதுமகிமை இதுமகிமை யெனப் புரளி செய்துலகை யேய்த்திட்டாலும், மதுநிகரான் பர்களுளத்தி லினிக்குஞ்சிவன் செயல்கடப்பார் வையத்தின்றே. (கரு)

பிறந்திறக்குங் குணங்களெலாம் பசுக்களுக்கே வுரியதெனப் பேசுநேர்மை, அறந்தழைத்த பெரியவரா மறிவுடையா ரனுபவத் தி லாழக் காண்பர், மறந்தழைத்த வஞ்ச மனச் செயலதிறல் வீணாசை வளருமப்பா, சிறந்தசைவ தெய்வமணி சிவப்பிரகாசமே பதியாய் சேவை செய்யே. (கசா)

உபதேச நிலைநில்லா மாணவனு லூதியமோ வொன்றுமில்லை தபங்கடந்தா லறிவடங்கா தெழிலணுகா தண்மைவழி சாராதீன விபத்துவந்த பின்னன்றோ வீணர்கலங் கிடுவர்தலை விதியிதென்றே சபலமுற யிடுகாடு சேருமுன்னே சிவன்கழலைச் சாருவாயே. (கஎ)

சிவோபதேசமாலை முற்றிற்று.

—o—

உ

சிவமயம்

ஸ்ரீ ஜெயவிநாயகன் றுணை.



**ஸ்ரீமத் – சிவப்பிரகாச தேசிக சுவாமிகளின்**

ஜ்யேஷ்டப் புத்திரரும்,

சென்னை சேத்துப்பேடு

"ஸ்ரீஜெய விநாயக சிவப்ரகாச மடாலய"

ஆதீன அர்ச்சகருமாகிய, மதுரகவி

சிவப்ரகாஸ குமரகுரு தேசிகரா லியற்றிய

## வழிபடுதெய்வ ஸ்ரீ ஜெய விநாயகர் வணக்கம்.

—— o ——

அருணோதய வொளியேயரு மறையோதிடு மரனேபவ
மருளாலிடர்ப் பெருகாசித்தி மதியேதரும் பதியேமைலக்
கருணாகரன் றுதிமேவிடக் கனிவாயருட் புரிவாயுளந்
தெருளேசிவப் பிரகாசனும் ஜெயவிநா யக காப்பதே.

———

பண் - கோல்லிக்கௌவாணம்.

———

ஆதியந்த மொன்றிலாத வண்ணலே வைங்கரனே
அகரவுக ரமுமகர மான பரத்துவனே
சோதிமலி தொண்டரகந் துதிக்கேற்ற வாறுத்
தோன்றியரு ளுதவிடும் ஓம் சுமுக பிரணவமே!
வாதிலார் திருமயிலை வள்ளல்கபாலீச் சுரன்மேல்
மன்னுஞ்சிவ ஞானத்தே வனஞ்சாற்ற வருடா
சிதமலி சேத்துப்பேடு சிவப்ரகாச மடத்துள்
ஜெயவிநா யகனேகுல தெய்வமணிச் சுடரே. (க)

பாசவூ முகற்றவல்லப் பரமசுதந் தானே
பாரிலகு மாயத்தே பதிந்திழியா வண்ணம்
பூசனையாற் றிடுமேழைப் பொருந்துமன மிடையா
புந்தியினில் வந்துகுடி புகுந்துசிவ போத
வாசமுற திருமயிலை வள்ளல்கபாலீச் சுரன்மேல்
மன்னுஞ்சிவ ஞானத்தே வனஞ்சாற்ற வருடா
தேசுலவுஞ் சேத்துப்பேடு சிவப்ரகாச மடத்துள்
ஜேயவிநா யகனேகுல தெய்வமணிச் சுடரே. (உ)

பதியளிக்கும் பெருந்தகையே பற்றற்ரு ருள்ளம்
பரவுங்கண பதியேநெறி பற்றஞான முற்றும்
நிதியளிக்கும் நின்மலனே நித்யாபரோட் சிதமே
நிலநெருப்பு நீர்முதலாய் நிலவுஞ்சுகார் ஜிதமே
மதியொளிரும் திருமயிலை வள்ளல்கபாலீச் சுரன்மேல்
மன்னுஞ்சிவ ஞானத்தே வனஞ்சாற்ற வருடா
திதியுவப்ப சேத்துப்பேடு சிவப்ரகாச மடத்துள்
ஜேயவிநா யகனேகுல தெய்வமணிச் சுடரே. (ங)

---

## கூத்தாடும் விநாயகர் துதி.

ஓங்காரத் துட்பொருளா யுலக னைத்து
முயிர்க்குயிரா யொளிர்வானை யுமையு மீசன்
பாங்குடனே கஜமுகவோ வியத்தைப் பார்க்கப்
பதித்துவமா யெழுந்தின்பம் பாலித் தானை
ஸ்ரீங்கார வாசிகனை சிவப்ர காசத்
தேனமுதா யன்பருளந் தித்தித் தங்கைக்
கோங்கமெனத் திருமயிலைக் கோபு ரத்துட்
கூத்தாடுங் கணபதியைக் குணங்கொள் வாமே.

## ஸ்ரீ கபாலீசுவரர்த்துதி.

திங்களோர் கலைசென்னி புனைந்துவூழ் தெறித்தின்பஞ் செறியுமாதி
கங்கையுடன் கொக்கிறகு கடிமலர்கொன்றையும் வாசங்காட்டிவிச
மங்கையோர் பாகத்து மகிழ்ந்தானை மாதேவ மாட்சி மையிலை
நங்கபா லீச்சுரனை நமபடரண் டாதுசதா நாடி வாழ்வாம்.

15
17840

## ஸ்ரீ கற்பகவல்லியம்மை துதி.

அயனரியிந் திரரளவி லடியவர்க ளகத்துறையு மற்புதத்தி
னியமமுற வைந்தெழுத்தை நிகழ்த்தபரன் செவிகேளா நீடுநெட்டு
வயமாமஞ் ஞையைக்கண்ட வல்வினைப்பா றிடபுன்னைவனத்திலிங்க
பயனுகந்த வன்னைகற் பகவல்லி பங்கயத்தாட் பணிந்து வாழ்வாம்

## ஸ்ரீ சிங்காரவேலர் துதி.

சூர்மாள தேவரெலாந் துதிசாற்றப் பரமன்விழி தோன்றி யாறு
பேர்விசு மங்கியெனப் பிறங்குசர வணையிற்சிசு வடிவம்பெற்று
கார்மேக வினைநீக்கி தெய்வகுஞ் சரிவள்ளி காத லோம்புஞ்
சீர்மேவுந் திருமயிலை சிங்கார வேலவனைச் சேவை செய்வாம்.

## ஸ்ரீ திருஞான சம்பந்தமூர்த்தி சுவாமிகள் துதி.

சண்பைநக ரெழுந்துபுறச் சமயவூ மூலக்களைந்துச் சைவ மோங்கத்
தண்ணமரும் ஞானப்பா லுண்டுசிவ தரிசனத்தை தாதைக் காணப்
பண்ணிசைத்துப் பதிமயிலை அங்கம்பூம் பாவைவர பதித்வ மோங்க
திண்குலவுந் திருஞான சம்பந்தக் குரவனடி சேவை செய்வாம்.

## ஸ்ரீ திருநாவுக்கரசு சுவாமிகள் துதி.

ஆழிகன் மிதந்தமண மழியவு மாதங்கத்தா லரையன் மற்றும்
பாழிகளைந் தேபணிந்து பதம்போற்ற சிவமயத்தின் பக்திமேவ
வூழிகளைந் தப்பூதி சேயனுக் குயிரளித் துமையாட் பங்கன்
காழகமீந் திடவுண்ட திருநாவுக் கரசரடி கருத்துள் வைப்பாம்.

## ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகள் துதி.

பனிமலரா னர்ச்சிக்கத் தேவனங்கொய் திடுங்காலைபார்வை மின்னு
நனிவதன நங்கையரி னுட்டமதாற் பிறப்புற்று நாவலூர் வாழ்
தனிப்பரமாஞ் சிவபக்த சடையனூர்த் தநயனென்ச் சார்ந்துமன்றல்
முனிந்தரனை பித்தனென்ற வன்றொண்டர் முளரிதாண் முடிமேற்
[கொள்வாம்

## ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகள் துதி.

துய்யபரி திரட்கொணர்வ பெருந்துறையிற் சிவபிரான் சோதிகண்டு
மெய்சிலிர்த் தனன்மெழுகா யுருகியவ் வெறுக்கைதனை வேதநாதன்
செய்யதிருப்பணிக்குதவிச் செழியன்முன் நரிகளைப்பரியாய்செய்து
வையமெலா மேற்றுந்திரு வாசக முரைத்தவரை வணங்கிவாழ்வாம்

A23 ;58·211

### ஸ்ரீ திருநந்திதேவர் துதி.

செய்யபன் மறைதேர்ந்துந் தேவர்களுக் கிரைந்து புராணச்சீர்த்தி
மெய்ம்மையுற விரித்தோதி மாயைவலி முரணுர்க்க வெய்ய சூளான்
பொய்யணுகக் கரநீட்டி விஷ்ணுவே பரத்வமெனப் புகல்வியாசன்
கையதனைத் தம்பிக்க முன்னெழுந்த நந்திகழல் கருதி வாழ்வாம்.

### ஸ்ரீ வைரவதேவர் துதி.

கருதுமுல குயிரனைத்துங் கவினுரிமை நம்பாலே காணற்பேற்றி
னுருவென்றே வுமைபங்கன் றனைமதியா பிரமனி னெட்பில்யாகங்
குருதிபெரு கிடசிரங்கொய் தளவிலா தேவர்செறுக் கொழித்துநீடு
திருதிமலி வைரவரின் றிருவடியை யுளங்கனிந்து சேவைசெய்வாம்

### ஸ்ரீ சரசுவதி துதி.

நான்முகனு விற்பொதுளு நடனத்தா ணுற்கவிக ணவில வின்பத்
தேன்மாரி யெனச்சிறந்து பாவாண ரகத்துறைந்து திவ்ய நாற்றப்
பான்மாரிப் பொழிசித்திப் பலுகிடவே கண்ணோக்கும் பாரதிச்சீர்
மேன்மைதருங்கலைவாணி மெல்லடியைமறவாதுவேண்டிவாழ்வாம்

—o—

### காரைக்காலம்மையார், கண்ணப்ப நாயனர், வாயிலார் நாயனர், மங்கையர்க்கரசியார் மற்றுமுள்ள திருத்தொண்டர்கள் துதி.

———

அகங்கோயிற் பணித்தாரு மறுநாளிற் காளத்தி யப்பருக்குத்
துகணீடுங் குருதிநீர்த் தோன்றவிழி யிடந்தப்பித் துதித்துக் காட்சி
மிகக்காணக் கனிபெற்ற வியன்காரைக் காலம்மை விமலன் பக்தி
புகழ்மங்கை யர்க்கரசிப் புண்யதிருத் தொண்டரடி போற்றி வாழ்
[வாம்.

### அங்கம்பூம்பாவை யம்மையார் துதி.

நறுமலர்கொய் நந்தனத்து வுமைபாத நனிபக்தி நாட்டி வாசப்
பெறுமலர்கொய் திடப்பாந்தண் விடமேறிப் பிரபஞ்சநீத்த வங்க
மெறிசெய்த வென்பதனைக் காழிபிரா னேந்திழையா யியற்றவந்த
பொறிமுகமின் னணிஅங்கம் பூம்பாவை யம்மை கழல் போற்றி
[வாழ்வாம்.

### ஸ்ரீ சண்டேசுரர்த் துதி.

மண்ணிநதிக் கரைமணலா லிங்கமாக்கி மலரிட்டர்ச் சனைப் புரியும் பக்தி மார்க்கம், விண்ணிழையுந் தேவரெலாம் விதப்புக் கொள்ள வியன்பூசை யாற்றிசிவ போதம் வேண்டிப் புண்ணிய வா வின்னமுதம் பொழிதற் கண்டுப் பொருது றுத்துந் தாதைத் தாண் மழுவால் போக்கி, எண்ணனருண் மலிசித்தி யின்பமுற்ற வெழிற்சண்டே சுரர்பதத்தை யேத்தி வாழ்வாம்.

### ஸ்ரீ திருவள்ளுவ நாயனார் துதி.

கடுமனத்தாற் காணரியச் சிவபரமன் திருவருளைக் கருதி யன்புப் படுவண்ணத் தேவரெலாம் பார்த்தஞ்ச பதிபக்திப் பரவுங் கற்பு நடுகிலையாற் பெருமிதவில் லறதருமம் நாட்டிபுகழ் நவிலு மைலை வடுவிலா வாசுகியை மணந்ததிரு வள்ளுவர்தாள் வணங்கி வாழ்வாம்

——o——

## குருவணக்கம்.

---

சென்னை சேத்துப்பேடு

ஸ்ரீ ஜெய விநாயக சிவப்ரகாஸ மடாலயம்

ஸ்ரீமத் - சிவப்ரகாச தேசிக சுவாமிகள் துதி.

உலகேலா முணர்ந் தோதுதற் கரியவனென்ற
நலங்கொ ளசரீரி நனிமொழி நாவிலெப் போது
மிலகு மன்பர்க ளிதயமே களிப்புற விசைத்த
மலமில் சிவப்பிர காசதே சிகன்கழல் மதிப்பாம்.

சீரணியுஞ் சிருக்கொளியாஞ் சிவசமயப் பெரும் புகழைத் திறமையோடுப், போரணியும்பவமொழியப் பூதியக்க சிவசின்ன போத மூட்டிப், பேரணியும் ஜெயவிநா யகசிவப் பிரகாச மடத் துட் பெட்பாம், பூரண சமாதியுற்ற சிவப்ரகாச தேசிகன்றாள் போற்றி வாழ்வாம்.

---

திருச்சிற்றம்பலம்.

---

## நூல்.

## சிவப்பிரகாச தேசிகமாலை.

எழுசீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்.
பண் - பஞ்சமம்.

—§—

திருவுளச் செயலைத் தெரிந்திலே னாயேன்
செகத்தினி லெவ்வணந் திகழ்வேன்
கருவுள நேரங் கழிந்தவை முதலுங்
கண்டிலேன் விண்டிலேன் கர்மம்
பெருமித வன்பர்ப் பேசிடு மிறையே
பிறப்பிறப் பற்ற பெம்மானே
செருமய னீக்கும் ஸ்ரீகபா லீச
சிவப்பிர காச தேசிகனே. (க)

அக்கரப் பொருளே வருமறை யுரைத்தற்
கரியவா வைம்முகச் சிவமே!
தக்கவா றுண்மைச் சாதனை மலியத்
தாயென வுதவிடுந் தண்சீர்
முக்கலை நடுவே முளைத்தவொண் சுடரே
முதிருமா றுவந்தருண் முழக்குஞ்
செக்கர்வே ணியனே ஸ்ரீகபா லீச
சிவப்பிர காச தேசிகனே. (உ)

முடிவுரை யமைந்து முத்திசிர்ப் பதிய
முன்னுரை வாசக மொழிந்துப்
படிமிசை யின்னற் படர்ந்திடா வண்ணம்
பக்குவம் வலியவுட் படுத்திக்
குடிலையின் வாசங் குலவிட மனமாங்
குரங்கதோர் மூலையிற் குந்தச்
செடிதவிர்த் தாளும் ஸ்ரீகபா லீச
சிவப்பிர காச தேசிகனே. (ங)

ஒழுவிலா னென்று னுணையன்றி வேறே
றுறைவிடங் கண்டிலே னுண்மை
சுழுமுனை நடனந் துலங்கவே நடிக்குந்
தூமணிச் சோதியே சுடரே
வழிபடு தெய்வ வடிவே வோங்கார
வட்டத்துள் வயநம சிவய
செழிவுறும் பரத்வ ஸ்ரீகபா லீச
சிவப்பிர காச தேசிகனே. (ச)

உறைவிடங் காணு துழன்றலை வேனுக்
குன்னத வசலபீ டத்து
முறைவழி காட்டி மூலகுண் டலியுண்
முளைத்தெழுஞ் சிவஞான முற்றித்
திறைபடும் புவனத் தீங்கெலா மகற்றித்
திருநிறைச் செல்வந்தா சேந்தன்
சிறைதவிர்த் தாண்ட ஸ்ரீகபா லீச
சிவப்பிர காச தேசிகனே. (ரு)

எழுமன வேட்கை யேற்றதோர் கவலை
இராப்பக லிடைவிடாச் சகடைக்
கொழுமலங் கொண்டு கூத்துக ளாடிக்
கூற்றன்கை மாள்வதாற் குணமென்?
வழுவலற் றிடம ஹேஸ்வரி மயிலாய்
மலரிட்டர்ச் சனைசெய மகிழ்ந்த
செழும்பொன்னே மணியே ஸ்ரீகபா லீச
சிவப்பிர காச தேசிகனே. (சு)

ஓங்காரத் துள்ளே வொளிறுமோர் மொழியி
னுண்மையை யுணர்த்துவ தென்றே?
மாங்கனிக் காக மலைவலம் வந்த
வடிவேலன் தோன்றிட வாமம்
நீங்கிடா சத்தி நிறைந்தொளிர் பவனே
நித்தமும் பத்தியாய் நினைக்குந்

OFFICE OF THE REGIST
3 JUN 19
MADR
17840

தீங்கிலா ருறவே ஸ்ரீகபா லீச
சிவப்பிர காச தேசிகனே. (எ)

காதலா மயக்கே கண்ணதைக் கெடுத்துக்
கன்னியர் கட்டிலுட் பட்டுப்
பாதகங் கோடி பண்ணினே னெனினும்
பருதிமுன் பனியெனப் பறக்க
சாதனை யளித்து சற்குரு லிங்க
சங்கம பக்திதந் தாளுஞ்
சீதள மதிகொள் ஸ்ரீகபா லீச
சிவப்பிர காச தேசிகனே. (அ)

ஆவது முன்னு லழிவது முன்னு
லன்றிமற் றறிகிலே னப்பா
மூவருந் தேவர் முனீந்திரர்ப் பலரு
மூதண்ட கோடிக ளனைத்துந்
தாவருஞ் சீவர் சாற்றிடும் பரத்வ
தாயகா தண்ணமர்ச் சடைகொள்
தேவனே சித்தம் ஸ்ரீகபா லீச
சிவப்பிர காச தேசிகனே. (கூ)

உடற்பொரு ளாவி மூன்றையுந் தத்த
முகந்தளித் தவருயிர்க் குயிராய்
நடலைவாழ் வகற்றி நமனிடர் நணுகா
நலந்தந்த ஓம் நமசிவாயா
தடவரை மூன்றுந் தழலெழ வெரித்தோய்
தானென்ற வகங்காரந் தவிர்க்கத்
திடனருண் மைலை ஸ்ரீகபா லீச
சிவப்பிர காச தேசிகனே. (ய)

ஓட்டுவ தம்போ வுடலுயி ரேக
வொன்னல ரெண்ணமோ பாணி
வீட்டுத லவைநேர் விளம்புத லெதுவோ?
வித்தகா யாவுநின் விருப்பே

தேட்டங்கொ ளடிமை சிவப்பிர காச
தேசிகன் குமரகுரு செஞ்சொல்
சேட்டங்கொள் மயிலை ஸ்ரீகபா லீச
சிவப்பிர காச தேசிகனே. (கக)

—o—

## உண்மையுணர்த்துங் கண்மணிமாலை.

பண் - கோல்லிக்கௌவாணம்.

அம்மானை யீற்றுகரு வானதநி சயமே
யவையுயிரா யமைந்தவித மனைத்து மற்புதமே
எம்மானைக் காணவலி யின்றிமர்க் கடமா
யிருக்கையின்றி மரந்தொத்தி யெவர்க்கும்பல் காட்டி
இம்மானை யுணராம லிரவுபக லாக
யெண்ணமோ பலகோடி யென்செய்வே னின்ப
வும்மான குண்டலியு ளோங்குஞ்சிவா னந்த
ஓம்ஓம்கபா லீசவுண்மை யுணர்த்துங் கண்மணியே. (க)

இல்லாதக் கொடுமையா லேங்குமிவ் வையத்
தெவரிட முறையிடென் றியம்புதற் கியலும்
பொல்லாத சனனமிதுப் போராடு தப்பா
பூதலம் பிறந்ததாற் புகழொன்று மறியேன்
சொல்லாத வோர்மொழியின் சூட்சமறி கில்லேன்
சுந்தரி யுமைமயிலாய்த் துதிக்கவருட் சுரந்த
வுல்லாச நிலைமன்ன வோங்குஞ்சிவா னந்த
ஓம்ஓம்கபா லீசவுண்மை யுணர்த்துங் கண்மணியே (உ)

பூதல மெலாமன்புப் பொருந்தசிவ சோதிப்
பூரண னந்தமெய்ப் புநிதநிலைப் பொருந்த
சாதனையாற் றில்லைவாழந் தணராமர்ச் சகர்கள்
சாற்றிதொழும் சம்போசிவ சங்கரனே ஹரனே
வேதன்சிரங் கொய்துகரம் விளங்கபலி யேற்கும்
வித்தகனே வேதமுதற் பொருளே விமலேசா

ஓதரிய மொழியைநால்வர்க் குரைத்த சிவானந்த
ஓம்ஓம்கபா லீசவுண்மை யுணர்த்துங் கண்மணியே (௩)

ஆதிபொரு ளாகியுல கனைத்துமுயிர்க் குயிரா
யண்டிவழி தொண்டுபுரி பண்டையடி யார்க
ளோதிபெரு மாதிபனே வோர்மொழியி னுளவை
யுள்ளபடி சின்முத்திரை யோடுரைத்தாட் புண்யம்
நீதிமலி மூதூர்திரு நீலகண்டர் குளா
னியதிகளைந் தெழின்மனையா ளுடனிளமைப்பெற்ற
ஆதியமே பக்திவலை யொடுங்குஞ் சிவானந்த
ஓம்ஓம்கபா லீசவுண்மை யுணர்த்துங் கண்மணியே (௪)

இரவுபக லற்றவொளி யெந்தைசிவ னடியார்க்
கில்லையென்னு தில்லாளை யீந்தவியற்பகையார்
பரவுசெங்நெல் முளையமுது பன்னலர்க்குப் படைத்துப்
பணிஇளையான் குடிமாறர் பதிமுத்திப் பெறவே
வரமளித்தப் பசுபதியே வாலையுமை மயிலாய்
மலரிட்டு வணங்கும்புன்னை வனக்ஷேத்திர மன்னு
முரகடனஞ் சுண்டவனே வொப்பிலா மணியே
ஓம்ஓம்கபா லீசவுண்மை யுணர்த்துங் கண்மணியே. (௫)

கண்ணூரு மங்கலமே களிப்பூணுங் கடத்தைக்
கருதாது சிவவேடங் கண்டு களிப்பெய்தி
யெண்ணாகி யெழுத்தாகி யிலக்கணமு மாகி
யிலகுகின்ற சிவமென்றே யெண்ணிபூதி கண்டு
பண்ணூருந் துதிசாற்றப் பகைவன் முத்தநாதன்
பாய்ந்துகொல்ல பக்திசெய்த மெய்ப்பொருளார்ப் பரவு
மொண்ணூர்ந்த விரதமுற்றோ ரோதுஞ் சிவானந்த
ஓம்ஓம் கபாலீசவுண்மை யுணர்த்துங் கண்மணியே (௬)

கள்ளமிலா நெஞ்சதிலே காணுஞ்சிவ னடியார்க்
கழலடியை யன்றிமற்றைக் கருதா விறன்மிண்டர்
வெள்விடையோன் சிவவருக்க விரதராய்கௌ பீனம்
வியந்தளித்து மறைத்ததனை வேண்டுமெனத் துலாவிற்

றெள்ளரிய மனைவியருஞ் செல்வனுட னேறிச்
சிவசோதி பெற்றஅமர் நீதிநாய னார்சீ
ருள்ளமதி லோங்கும்பர மார்த்த சிவானந்த
ஓம்ஓம்கபா லீசவுண்மை யுணர்த்துங் கண்மணியே (௭)

வேதாந்த சித்தாந்த வேற்றுமை யிலாது
வேண்டுவா ரகத்துறையும் விமலசிவ ஞானப்
போதாந்த வமுதூட்டும் புநிதனே கருவூர்ப்
புண்ணியத் திலமேவும் பூசுரன்சீர்ப் பரவிப்
பாதார விந்தமிடும் பனிமலரைக் கவிழ்த்தப்
பட்டத்து யானையுடன் பாகர்களைக் கொன்ற
ஓதாண்மை எறிபத்த ரோம்புஞ் சிவானந்த
ஓம்ஓம்கபா லீசவுண்மை யுணர்த்துங் கண்மணியே. (௮)

பாசவினை தவிர்த்தருள வல்லபரம் பரனே
பாரளந்தோ னயன்றேடிப் பார்க்கவொண்ணு தவனே
வாசமுறு மெயினனூர் மந்திரவெண் ணீற்றின்
வளங்கொள் ஏனாதிநாத நாயனார் மாசில்லா
தேசுலவுங் காளத்தி தேவன்விழிப் புண்ணீர்
சிந்தகண்டுத் தீவிரமாய்த் தெளியவேகண் ணப்ப
ஓசைகண் ணப்பாநிற்க வோதுஞ் சிவானந்த
ஓம்ஓம்கபா லீசவுண்மை யுணர்த்துங் கண்மணியே (௯)

எதிலாத வன்பரக மேகாந்த மாகி
யிருக்கின்றச் சிவமயத்தை யென்னறிவே னடியேன்
காதகன்வீண் பாதகனை கைவிடிலோ தவிப்பேன்
கடவூரிற் கலயர்கஞ்சா றூர்மானக் கஞ்சாறர்
தீதில்கண மங்கலத்த சிறந்தோங்குந் தாயனார்
திவ்யபணி யேற்றுபாணித் தெரியவருட் செய்த
ஓதிமமென் னடையுமையா ளோங்குஞ் சிவானந்த
ஓம்ஓம்கபா லீசவுண்மை யுணர்த்துங் கண்மணியே. (௰)

தீங்குடைய புவிமயக்கிற் சிதைவடையு மேழைச்
செடியுடைய நாயினேன் சீரடைவ தென்றோ ?

பாங்குடனே வேய்ங்குழலாற் பஞ்சாட்சர மிசைத்து
　　பாடுமழ நாட்டானய நாயனர் பக்தி
ஸ்ரீங்காரத் துண்ணடன தேவே சிவப்ரகாச
　　தேசிகன் குமரகுரு செந்தமிழமேழற் றருட்செய்
ஓங்காரத் துட்பொருளா முயர்வே சிவானந்த
　　ஓம்ஓம்கபா லீசவுண்மை யுணர்த்துங் கண்மணியே. ()

—— § ——

## சிவமயத் தெளிவுறுந் திருத்தகுமாலை.

—— o ——

பண் - கோல்லி,

எற்றமுக் தாழ்வுமாகி யியைவன விகபரத்து
வாற்றலா லமணர் வஞ்ச மழிவுற மும்மை யாலே
போற்றியே முழங்கை தேய்த்த மூர்த்தியா மடிக ளார்வத்
தேற்றமே மைலே வாழ்வே சிவமயத் தெளிவுளானே. (க)

　கருவினே மயக்கந் தீரக் கடிமல ரிண்டை சூட்டிப்
　பொருப்பெனப் புகலூ ரன்புப் புகழ்முருக நாயனர்புன்
　பருவர னீங்கப் போய்கைப் பணிபசு பதியார்பக்தித்
　திருவருட் குலவு மைலே சிவமயத் தெளிவுளானே. (உ)

இதயத்தி லிருத்தி நாளைப் போவேனென் றெழிலாற் புன்கூர்
சதமெனக் காட்சி பெற்றந் தணர்களுஞ் சாற்ற மன்றுட்
பதந்தரு மிறைவனுசைப் படியுண்டநந்த னருச்
சிதமலி செம்மை மைலே சிவமயத் தெளிவுளானே. (ந)

　தேயம்போற் றிடுநற் காஞ்சி சிவனடி யார்க்குத் தொண்டு
　தூயவஸ் திரமொ லித்துத் துகளற்றக் குறிப்புத் தோண்டர்
　தாயுமை யோடு காணத் தண்ணருடந்த தேவே
　தியவூ முகற்றுமைலே சிவமயத் தெளிவுளானே, (ச)

வேதஞ்சூழ் சேய்ஞலூரின் விளங்கிய விசார சர்மர்
பாதகந் தீர லிங்கம் பணித்தாவின் பாற் பொழிந்து
ஒதுதற் கண்டொ றுத்துந் தந்தைத்தா ளற வொழித்தத்
தீதிலார் போற்று மைலே சிவமயத் தெளிவுளானே. (ரு)

கலைமலி ஆழு ரெய்திக் கருத்தவை மாற்றங் கொண்டுக்
கொலைபடு சூலை நீங்கக் கொடுவிடங் குடித்து மாட்சி
சிலையொடு கடற் கடந்தத் திருநாவுக் கரசர் சேவை
சிலம்பொலி பாதா மைலை சிவமயத் தெளிவுளானே. (௬)

எந்தைபஞ் சாட்சரத்தி லிடைவிடா தின்பங்கொண்டு
நிந்தைசெய் யமணர்தம்மை நெடுகழு வேற்றி பக்கிக்
கொந்திடச் செய்தமைச்சர் குலச்சிறை நாயனருட்
சிந்தையே களிக்கு மைலை சிவமயத் தெளிவுளானே. (௭)

ஓடியே வலையுநெஞ்சை யோர்வழி யொடுங்கவைத்து
பீடுறும் பெரு மிழலைக் குறும்பர்மாங் கனியைப் பெற்று
சேடுய ராலங் காட்டிற் திருநடத் திறமைக் கண்டார்
தேடிதஞ் சிறக்கு மைலை சிவமயத் தெளிவுளானே. (௮)

இடிபடு நெஞ்சந் தன்னை யெக்கரா வணமடக்கிப்
படிமிசைப் பாலர் பேயர்ப் பான்மையாற் பருதியென்னக்
குடிலையின் சக்திக் கூட்டிக் கூற்றினைக் கூற்றுதைத்தோய்
செடியனை யாட்கொள் மைலை சிவமயத் தெளிவுளானே. (௯)

தங்கண மேற்று நாவுக் கரசராங் குருவிஸ்வாசப்
புங்கவப் பூதி யன்பர் புத்திர னுயிர்க்க சாத்த
மங்கை வாழ் நீலநக்கர் மனைவியார் சிலம்பி பூதச்
சிங்கொழிந் தன்பார் மைலை சிவமயத் தெளிவுளானே (௰)

நன்னெறி ஏமப் பேரூர் நமிநந்தி யடிகள் கங்கை
தன்னைநெய் விளக்கா யேற்றிச் சமணர்கள் சாற்ற நின்றார்
சின்னனன் சிவப்ர காச தேசிகன் குமர குரு
தென்மொழி செவிகொள் மைலை சிவமயத் தெளிவுளானே.

—o—

## கருணீகமாலை.

பண் - வியாழக்குறிஞ்சி.

கழலேத்திடு மெளியன் றுயர்க் கடல்மூழ்கினேன் கதியீந்துநி
னிழலோம்பனை யெளவேசுக நெறியே தயைப் புரிவாய் நிதி
வழங்குங் காழிவள்ள லுளம் மகிழஞான வமிர்தீந்த ஓம்
கழகத்தொளி யழகுற்றிடுங் கபாலீசனே கருணீகனே. (௧)

கருவேவினை யதுவேபெரு கதிரின்படி சகடம்மெனத்
திருவேதிருப் பெருமங்கல சேனுபதித் திகழும்பணி
பெருமாதவ ருயர்ஏயர்கோன் கலிக்காமரும் பிணிநீங்கிடக்
கருதும்புக ழாரூரர்சொற் கபாலீசனே கருணீகனே. (உ)

விணுண்மதி வேகும்படி விதியோ பவச் சதியோ வினை
பூணுர்த்திற மோருவச மாமா வுயிர்க் குயிராய் சிவ
சேணுர்வடி வாகப்பணி செய்தார்ப் பிணி கொய்தாரிவண்
காணுவிடிற் பயனில்லை கபாலீசனே கருணீகனே. (ங)

கலங்காமன மதுவேகதி காட்டும்முறை நோக்காய்க் கவி
சொலுமாமறை வழியோர்ந்திடத் துணையேநலச் சுகமுற்றிட
யிலகுஞ்சிவ காருண்யமேற் றெழிற்சித்தரா மூலரிதங்
கலந்தின்புறு தலமேவுங் கபாலீசனே கருணீகனே. (ச)

மதியுட்சிவ மணியாய்சிவ மணியாயுயிர் வருக்கமகி
முதிபப்புக ழாரூர்தண்டி யடிகளினந் தகம்போக்கியப்
பதியேராமன் றுதியேற்றருட் பணித்தாய்சுக மளித்தாய்நல
கதிவேறிலை யுனையன்றி கபாலீசனே கருணீகனே. (ரு)

சங்கேந்தியத் தாமோதர னுடனே சதுர்முக பிர்மனும்
பங்கோர்ந்தடி முடிதேடியும் பாராவனற் பிழம்பானவா
மங்காதவாழ் வருள்வாய்மலை மருந்தேகலை கிழங்கே சடை
கங்காதர லிங்கேச கபாலீசனே கருணீகனே. (சு)

பலுகும்வினை வலியாலிடர்ப் பட்டேமதி கெட்டேனிவை
விலகும்படி கதிதந்தருள் விமலாஞான வமலா சுடர்
நிலவும்பிறை வளரும்படி நெறிதந்தவா குறைவிண்டிடக்
கலனுற்றன னலவோசொற் கபாலீசனே கருணீகனே. (எ)

மூலமதி னுலேசிவ மோனமென முதிருங்கலை
சாலவழி நீடிடஓம் தத்சத்தெனச் சாந்தமதிற்
சீலசிவ பணியாற்றியே சென்மங்கடைத் தேறும்வகைக்
காலனிலைக் காட்சியே கபாலீசனே கருணீகனே. (அ)

மறையைக்கள வாடிக்கடல் மறைசோமுகா சூரன்வலி
குறைத்தேமச்ச மாகிக்கொணர் மாலின்றுதி கொண்டேவுரு

மிறைநீக்கிய மீனேஸ்வரா வேதந்தொழு மேலோய்ப் பௌவக்
கறைகண்டனே யெனையாளுங் கபாலீசனே கருணீகனே. (௯)

ஏல்ராமன் தாலேவிதி மேலே மதி யேமப்பகற்
றுலாட்டினச் சிராட்டிலே மீளாதுயிர்ப் பாலேட்டிலே
மூலாதர முணர்ந்தேனிலே முறைகேட்டருள்முகிலே சூர்க்
காலாசிவப் பிரகாசக் கபாலீசனே கருணீகனே. (௰)

விருப்பான்து வெறுப்பாகிப்பின் வெறுப்பேவிருப் பாமாலவை!
திருப்பும்வழி சிவப்ரகாச் குமர்குரு தேசிகன் சொற்
பொருப்பேவன்ப ரிருப்பே சிவ போதந்தரும் புநிதா யேழைக்
கருவாதனை யடையாதாட் கபாலீசனே கருணீகனே. (௧௧)

---

## அரஹரமாலை.

—o—

பண் - கர்ந்தார் பஞ்சமம்.

நாலடிமேல்வைப்பு

---

பலபல் வினைவலி பற்றிடினுங்
கலனுறு புவிமயற் கலந்திடினுந்
தலந்தொரு நினதடி சாற்றிடவே
நலந்தர் வேண்டும்வி நாயகமே
படிறே தவிர்த் தாளுங்கற் பகவல்லிநற் பங்கனேமெய்
யடியார்க்கெளி யவனே ஸ்ரீக பாலீச்சுர அரஹரனே. (௧)

கறையிலா திருவேற் காடு மூர்க்கர்
மறைமொழி யுஞ்சோ மாசிமாறர்
முறைவழி பணிகொண்டு முத்திதந்தப்
பிறையணிச் சடையுடை பிஞ்ஞகனே
படிறே தவிர்த்தாளுங் கற்பகவல்லிநற் பங்கனேமெய்
யடியார்க்கெளி யவனே ஸ்ரீக பாலீச்சுர் அரஹரனே. (௨)

திருவுள்ச் செயற்படி செக மிலகுந்
திருக்கிற்சங் கமங்கை சாக்கியருட்

கருதியே மலரெனக் கல்லெறிய
மருளதை யகற்றிய மஹத் தவனே
படிறே தவிர்த்தாளுங் கற்பகவல்லிநற் பங்கனேமெய்
யடியார்க் கெளியவனே ஸ்ரீக பாலீச்சுர அரஹரனே, (௩)

பையுளைப் பறக்க பஞ்சாக் கரத்தை
வுய்துண ரொண்டிரு வாக் கூரின்
செய்பணி சிறப்புலி நாயனர் சீர்
வையக மேற்ற வாழ் வளித்தவனே
படிறே தவிர்த் தாளுங் கற்பகவல்லிநற் பங்கனேமெய்
யடியார்க் கெளியவனே ஸ்ரீக பாலீச்சுர அரஹரனே, (௪)

மையிலா மனதுடன் மகவறிந்து
சைவமா தவருணச் சமைத் தளித்தத்
துய்யவன் பணிசிறுத் தொண்டர் துதி
தெய்வமே திருநீற் றொளியினனே
படிறே தவிர்த் தாளுங்கற் பகவல்லிநற் பங்கனே மெய்
யடியார்க்கெளி யவனே ஸ்ரீக பாலீச்சுர அரஹரனே, (௫)

காவலர்ம சோதை கழறிற் றறிவார்
நாவலர் கோனுட னட்புற லான்
தேவரு மதித்திடத் திகழுங் கைலை
தாவரும் புகழ் நலந் தந்தவனே
படிறே தவிர்த் தாளுங்கற் பகவல்லிநற் பங்கனே மெய்
யடியார்க்கெளி யவனே ஸ்ரீக பாலீச்சுர அரஹரனே, (௬)

சீர்காழி கணநாதர் தேவ னத்து
நார்மலி வெய்திட நறுமலரா
ஞர்வமுற் றிண்டைய லங்கரித்து
கார்வினைக் கடந்திடக் களிந்தவனே
படிறே தவிர்த் தாளுங்கற் பகவல்லிநற் பங்கனேமெய்
யடியார்க்கெளி யவனே ஸ்ரீக பாலீச்சுர அரஹரனே, (௭)

ஆற்றலொண் களந்தை யரசன் சிவ
தேற்றமே திரண்வழி செழிப்புறு மெய்

கூற்றுவ நாயனுர் குண மலர்ந்து
போற்றுமா னந்தமெய்ப் பொருளானே
படிறே தவிர்த் தாளுங்கற் பகவல்லிநற் பங்கனேமெய்
யடியார்க்கெளி யவனே ஸ்ரீக பாலீச்சுர அரஹரனே. (அ)

பொய்யடிமை யிலார் புகழ்ச்சோழர்
மொய்யுள நரசிங்க முனை யரைய
ருய்வலே பொன்மீ னுகந்தளித்த
செய்பணி அதிபத்தர் சேவிதனே
படிறே தவிர்த் தாளுங்கற் பகவல்லிநற் பங்கனே மெய்
யடியார்க்கெளி யவனே ஸ்ரீக பாலீச்சுர அரஹரனே. (சு)

கடவிய வினைவலி கட்டதிரு
லடிமையென் றகம்பாவ மடர்ந்தவில்லா
விடர்புரி காமறுத் தெறிந்த பெண்ணு
கடகலிக் கம்பர்நற் கலியன் துதி
படிறே தவிர்த் தாளுங்கற் பகவல்லிநற் பங்கனே மெய்
யடியார்க்கெளி யவனே ஸ்ரீக பாலீச்சுர அரஹரனே. (௰)

தேசுய ரண்ணலே சிவப்ரகாச
தேசிகன் குமரகுரு தமிழாற்
பூசித மாலையாற் போற்றி செய்தேன்
வாசிவா திருவருண் வழங்கிடவே
படிறே தவிர்த் தாளுங் கற்பகவல்லிநற் பங்கனேமெய்
யடியார்க் கெளியவனே ஸ்ரீக பாலீச்சுர அரஹரனே. (கக)

---

## பரத்துவப் பசுபதிமாலே.

—o—

பண் - இந்தளம்.

—o—

சத்திமயமே சத்தாயுள்ளத் தங்குந் தனிப்பிழம்பே
முத்தி வரிஞ்சி யூர்வாழ்சத்தி நாயனுர் முறைதொண்டு
அத்திமல்குங் காஞ்சிநகர்ஐ யடிகள் காடவர்கோன்
பத்தி யேற்றக பாலீச் சரத்து பரத்துவப் பசுபதியே. (க)

OFFICE OF THE REGIS
3 JUN

தெய்வயானை வள்ளி நேசன் றேவசே னாதிபதி
துய்யமருங்கிற் றும்பிமுகனுந் தோன்றுஞ் சுந்தரனே
வெய்யி லிருக்கு வேளூரார்புல் விற்று விளக்கெரித்தார்
பைவிடங்கொள் கபாலீச்சரத்து பரத்துவப் பசுபதியே (உ)

மதுரத் தமிழ் மாகவிசொன் மலிந்துரை மன்னர்புக
மூதவுசெல்வ வெறுக்கை யோம்பி வுயர்சிவா லயம்புதுக்கி
மதுராபுரிகூன் பாண்டி மன்னன் வளைவுறு கூன்நிமிரப்
பதம்வருடுங்க பாலீச் சுரத்து பரத்துவப் பசுபதியே. (௩)

ஆர்த்தி யானே ரச்சிப்பார்க ளகம்விட் டகலாதுப்
பூர்த்தி மல்கும் வாயிலார் சீர்ப் புரவலன் முனையடுவார்
சீர்த்தி யாற்கழற் சிங்கர் இடங்கழி செருத்துணை நாயன்மார்
பார்த்தி பனே கபாலீச்சரத்து பரத்துவப் பசுபதியே. (௪)

பூசனைக்குக் காசுபெற்றப் புகழ்த்துணை நாயனார்
வாசதொண்டி னெற்குறைய மனைமக்கண் மற்றும் வாளான்
வீசிநிலத்தில் வீழ்த்தி நின்ற வியன்மலி கோட்புலியார்
பாச நீக்குங்க பாலீச்சரத்து பரத்துவப் பசுபதியே. (௫)

பசுவின் பின்கன் றணைதற் போலப் பரசிவ னடியாரைப்
விசுவசித்து பேதமின்றி விளங்குந் தொண்டுளுற்றி
பசிதமா பத்தராய்ப் பணிவார் பரமனையே பாடுவார்
பசைகொ ளுங்க பாலீச்சரத்து பரத்துவப் பசுபதியே (௬)

சித்தத்தை சிவன்பாலே வைத்தார் திருவா ரூர்ப்பிறந்தார்
சத்யோ சாதவாம தேவமகோரந் தற்புருட ஈசான
வுத்தரிஷீஸ் வரராய் முப்போதுந் திருமேனி தீண்டி வுண்மைப்
பத்த ருறைக பாலீச்சரத்து பரத்துவப் பசுபதியே. (௭)

கற்ப மனுகற்பமுப கற்ப மூவகைக் கவின்பூதி
விற்பன சிவாகம விதிப்படியே விளங்க புண்டர வட்ட
முற்பொ லியமுழ நீறு பூசிய முனிவர்ப் புகழ்நீடும்
பற்ப மேனிக பாலீச்சரத்து பரத்துவப் பசுபதியே. (அ)

இரும்பைக் காந்த மிழுக்கும் வணமே யெங்குநிறைந்தானே
விருப்பாய் சுந்தர மூர்த்தி நாயனார் விளம்பியத் தொகைநீடு

தருப்பமுற்றப் பாலுமடிச் சார்ந்தார்ப் பூசலார்ப்
பர விடுங்க பாலீச்சரத்து பரத்துவப் பசுபதியே. (க)

மாசில் மங்கையர்க்கரசி மாண்புற மனதிலேந்தெழுத்தோது
நேச நாயனர் கோச்செங்கட்சோழர் நீடின்பவிசை நிலவும்
வாசநீல கண்ட யாழ்ப்பாணர் வளரும்பிறை மதிபோல்
பாச மகற்றுங்க பாலீச் சரத்து பரத்துவப் பசுபதியே (ய)

நத்தொலி பரவும் நாவலூர்ச்சடைய ஞரிசை ஞானியார்
முத்திவிளங்கக் கருணை யளித்த முதல்வா முறைகேட்டு
சித்தியளித்தாள் சிவப் பிரகாச தேசிகன் குமரகுரு
பத்தித் தரங்க பாலீச் சரத்து பரத்துவப் பசுபதியே. (கக)

—o—

## போற்றி சட்டகமாலை.

அறுசீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்.

குவிந்திடுங் குணத்தி லன்புக் கொண்டதே கோயிலாக்கி
புவிமயற் போக்கு ஞானப் பூரணு னந்த போதங்
கவிந்தருட் புரிய வல்லாய்க் கழலடிக் கருதி நின்றேன்
தெவிட்டாதத் தேனே மைலை ஸ்ரீகபா லீசா போற்றி. (க)

எத்திறம் பெற்று மென்ன விதயமோ ரிடத்திற் றங்கு
மத்திற முன்னை யல்லா லருளுவார் யாவருண்டு
சத்திகற் பகவல் வித்தாய் சதுர்மல ரிட்டு சாற்றுஞ்
சித்திரத் தேருர் மைலை ஸ்ரீகபா லீசா போற்றி. (உ)

சுக்கிரன் கண்ணிழந்துத் துதித்திட வருட் சாந்த
செக்கர்வே ணியனே வேதந் திகழுறப் பூசைச் செய்ய
மிக்குயர் மாட்சி மன்ன வித்தக மளித்தோ யுண்மை
திக்கெலாம் போற்று மைலை ஸ்ரீகபா லீசா போற்றி. (ங)

உச்சியின் மேலே தீப வுன்னத வொளியே நீடுஞ்
சச்சிதா னந்த வாழ்வே சர்வலோ கச் சரண்யா
மெச்சிய சீதா ராமன் விழைவுற்றர்ச்சித்து வேண்டுஞ்
செச்சைநீற் ஞெளியாய் திவ்ய ஸ்ரீகபா லீசா போற்றி. (ச)

எள்ளுக்கு ளெண்ணெ யென்ன யிலகிடு மெந்தா யுற்ற
வள்ளலே வாத வூரர் வழுத்திய வாசகத் தே
னுள்ளமே களிக்க வுண்டு வுலகெலாம் போற்ற நின்ற
தெள்ளரு மணியே மைலை ஸ்ரீகபா லீசா போற்றி. (௫)

மலைத்துல காசைப் பற்றி மயங்கிடு நாயேன் றன்னை
கலைத்துள வதனைக் காட்டிக் கண்மூடி மௌனி யாக்கி
நிலைத்திடுஞ் சிவலிங் கத்தை நெஞ்சுளே நிறுத்தும் வையத்
திலகமே சீரார் மைலை ஸ்ரீகபா லீசா போற்றி, (௬)

காட்சியே மல்கச் சீர்த்திக் கண்ணுளே கண்டு போற்ற
சூட்சியாந் திறவு கோலைச் சொற்றிட வேண்டுந் தூய
மாட்சியே மாசொன் றில்லா மாணிக்க மலையே நாளுந்
தீட்சிதர் மந்திர மூல ஸ்ரீகபா லீசா போற்றி. (௭)

## வாழி விருத்தம்.

அற்புதஜம் ஜெயவிநா யகன் சித்தி புத்தி
அத்தன்கபா லீசன்கற் பகவல்லி யம்மை
பொற்புலவுஞ் சிவமுருகன் புநிததெய்வ யானைப்
புகழ்வள்ளி நவவீரர்ப் புள்ளிமயில் வேலும்
நற்குரவர் நால்வருட னவிலுந்திருத் தொண்டர்
ஞானவெண் ணீறக்கம் நாற்கவிசொற் புலவர்
சிற்பரனின் சிவஞானத் தேவனநூற் குதவிச்
செய்த்வருஞ் செகத்தோருஞ் சிறந்து வாழியவே.

திருமயிலை ஸ்ரீகபாலீஸ்வரரின்
ஐம்பத்துமூன்றுவது வருடத்திய
சிவஞானத்தேவனம் ஸமாப்தம்.

—S—

ஓம் [illegible]ப்பார்வதிபதயே நம: அரஹர மஹாதேவா
திருச்சிற்றம்பலம்,

